உ

சிவமயம்




அருணகிரிநாதர்

உ

காலம் அறிவான் கருணை புரிவான் குன்றக்குடியான்

அருள்தரு சண்முகநாதப் பெருமான் துணை



அருள்தரு சண்முகநாதப் பெருமான்

குன்றக்குடி

3-5

அருணகிரிநாதர்

பாரத தேசம் புண்ணிய பூமியாகும். அதிலும் தமிழகம் ஆன்மீகப் பெரியவர்கள் பலரும் அவதரித்த பெருமைக் குரியதாகும்.

எத்தனை ஞானிகள், எத்தனை மகான்கள், எத்தனை பெரியவர்கள் எல்லாம் இந்தத் தமிழ் மண்ணிலே தோன்றி ஞானப் பயிரை விளைவித்து மக்களைக் கடைத்தேற்ற அவதரித்தவர்கள்.

தலங்கள் எண்ணற்றவைகள் பாடல் பெற்ற தலங்கள். திருஞானசம்பந்தப் பெருமானும், திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், மாணிக்கவாசகரும் தலங்கள் தோறும் சென்று பாடிப் பரவிப் பக்தியைப் பரப்பி வந்தனர்.

அதேபோன்று ஆழ்வார் பெருமக்களும் அற்புதத் தமிழில் பாடி விஷ்ணுவை வழிபட்டுத் தமிழையும் பக்தியையும் வளர்த்தனர்.

பாடல் பெற்ற சைவத் திருத்தலங்கள், 276. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்த தலங்கள் 108 ஆகும்.

பாடல்களுள் ஆழ்வார்கள் நீங்க இன்னும் பல பெரியவர்கள் பட்டினத்தார், ரமண மகரிஷி, சேஷாத்திரி சுவாமிகள், அருணகிரிநாதர், குரு நமச்சிவாயர், குகை நமச்சிவாயர், தாயுமானவர், வள்ளிமலை சுவாமிகள், திருவாரூர் தக்ஷிணா மூர்த்தி சுவாமிகள் போன்றோரும் ஆன்மீகத் தத்துவத்தை தங்கள் வாழ்க்கை நியதி மூலம் உலகிற்கு உணர்த்தி மக்களைப் பக்தி வழியில் சக்தி மிக்கவர்களாகச் செய்தனர்.

தலங்களில் பல பலவிதமான சிறப்புக்களை உடையது.

ஒவ்வொரு தலமும் ஒவ்வொரு விதமான தனிச்சிறப்புக் கொண்டதாகும்.

திருவண்ணாமலை என்ற தலம் மிகவும் சிறப்பு வாய்ந்தது ஆகும்.

நினைக்க முக்தி அளிக்கும் திருவண்ணாமலை நெருப்புத் தலமாகும். மண்-திருவாரூர்-காஞ்சிபுரம்; நீர்-திருவானைக் காவல்; காற்று-திருக்காளத்தி; வானம்-சிதம்பரம் இவைகள் பஞ்பூசத் தலங்கள் எனப்பெறும்.

திருவண்ணாமலையில் பல பெரியவர்கள் அவதரித்துள்ளனர்.

இங்கு மலையே சிவசொரூபம் என்பார்கள்.

கலியுகத்தில் இந்த மலை கல்லாய்ச் சமைந்துள்ளது.

பதினைந்தாம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் அவதரித்த பெரியவர் அருணகிரிநாதர் ஆவார்.

அருணகிரிநாதர் இளவயதில் நல்ல கல்வியும் கற்று வந்தார்.

இளவயதில் முருகப் பெருமான் கருணை கைவராத காரணத்தால் பேரின்ப உணர்வு தோன்றவில்லை.

குரு மார்க்கம் கிட்டவில்லை.

அதனால் வழி தவறி வாழ்வும் தவறி உடலும் உள்ளமும் நொந்து வாழ்க்கையையே வெறுத்து விட்டார்.

உலகமே தன்னை ஏற்காமல் கேலி செய்யும் நிலையை உணர்ந்து நொந்து போனார்.

என்ன செய்வது என்று தெரியவில்லை.

3-5

இறுதி நிலையில் மனிதன் தன் தவறை உணரும் பொழுதுதான் கடவுளை நினைந்து கைதொழுது கண்ணீரும் கம்பலையுமாக நிற்கின்றான்.

தன்னை உணர்ந்தவனை- தன் தவற்றைத் திருத்திக் கொண்டவனை ஆண்டவன் கைவிடுவானா?

ஆண்டவனின் அருள் மனித உயிர்களையும், மற்ற ஜீவன்களையும் காத்துக் கரையேற்றுவதுதானே.

இந்து தர்மத்தில் தெய்வங்கள் பல பெரியவர்களை- பல பக்தர்களைக் கடைத்தேற்றிய கதைகள் நிறையவே உண்டு.

அந்த வகையில் ஆட்கொள்ளப் பெற்றவர்தான் அருணகிரிநாதர்.

மனம் நொந்து உடலும் கெட்டுப் போன அருணகிரிநாதர் திருவண்ணாலைக் கோவிலில் உள்ள கிளிக் கோபுரத்தில் ஏறி 'முருகா' என்று தலைகீழாக வீழ்ந்தார்.

முருகன் காப்பாற்றாமல் இருப்பானா?

முருகன் தோன்றி அருணகிரியைத் தாங்கிப் பிடித்துப் பூமியில் நிறுத்தினான்.

முருகன் கைபட்டதும் அருணகிரியின் உடலில் உள்ள தீயநோய்கள் அனைத்தும் மறைந்து உடல் ஜொலிக்க ஆரம்பித்துவிட்டது.

முருகனே குருவாக வந்து ஆட்கொண்டுவிட்டான்.

இரு கரங்களையும்கூப்பிய வண்ணம் கண்ணீர் மல்க 'முருகா!' என்று அவன் அடிபற்றித் தொழுது நின்றார்.

''அருணகிரி என் புகழைத் திருப்புகழாகப் பாடு!'' என்றார் முருகப் பெருமான்.

''எட்டும் இரண்டும் தெரியாத அடியேன் எப்படி சுவாமி உமது புகழைப் பாடுவேன்?'' எனறார் அருணகிரியார்.

உடனே முருகன் தன்னுடைய வேலால் அருணகிரியின் நாவில் ஓங்காரத்தை எழுதினார் (ஓம்).

கடல் மடை திறந்ததுபோல் தமிழ் பிரபாகமாக வந்தது.

அந்தப் பாடல்தான் இந்தப் பாடல். முதல் பாடல்-முத்துப் பாடல்! முருகன் அருள் கொழிக்கும் பாடல்!

திருப்புகழ்

நூல்

முத்தைத்தரு பக்தித் திருநகை
அத்திக்கிறை சக்திச் சரவண
முக்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்

முக்கட் பரமற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி விரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வது மொருநாளே

தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புகை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

பிறகு முருகன் 'சும்மா இரு' என்று கூறி மறைந்தார்.

சும்மா இரு என்றால் தவத்தில் இரு என்று பொருளாகும்.

'சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே!'

என்று இந்த அனுபவத்தைப் பின்னர் அருணகிரிநாதர் தான் அருளிய கந்தர் அநுபூதியில் பாடுவார்.

பொருள் - பக்திப் பொருள் - பாடும்பொருள் - இறைவனோடு கூடும் பொருள் - உலகப் பொருள் - உண்மைப் பொருள்.

அருணகிரிநாதரின் பாடல்கள் அனைத்தும் அனுபவபூர்வ மான ஆக்கமும் ஊக்கமும் தருபவைகளே.

திருப்புகழ்

முருகனைப் பற்றிய புகழ். முருகனே முழு முதற் கடவுள் என்ற கருத்தை நிலைநாட்டும் தமிழ்.

தமிழில் சந்தப் பாடலை உண்டாக்கித் தமிழ் இலக்கியத்திற்கும் பக்தி உலகத்திற்கும் ஏன், இசை உலகிற்கும் ஓர் அற்புதமான வழியைக் காட்டியவர் அருணகிரிநாதர் ஆவார்.

ஆதி சங்கரர் இந்து மதத்தை ஆறு வகைகளாகப் பிரித்தார்.

1. குமரக் கடவுளை வழிபடுவது கௌமாரம்.

2. சூரியனை வழிபடுவது சௌரம்.

3. கணபதியை வழிபடுவது காணாபத்தியம்.

4. சக்தியை வழிபடுவது சாக்தம்.

5. விஷ்ணுவை வழிபடுவது வைணவம்.

6. சிவனை வழிபடுவது சைவம்.

இதில் கௌமாரம் என்ற கொள்கைக் கோட்பாட்டை எடுத்துக் கொண்டு அருணகிரிநாதர் முருகனை முழு முதற் தெய்வமாக உறுதி செய்து திருப்புகழ் பாடினார்.

எல்லாத் தெய்வங்களையும் பாடுவார். இறுதியில் முருகனை முத்தாய்ப்பாக வைத்து 'பெருமாளே' என்று முடிப்பார்.

முருகனின் கட்டளைப்படி அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் பன்னிரெண்டு ஆண்டுகள் மோனத் தவமிருந்தார்.

முருகனை நினைந்து நினைந்து உள்ளம் உருகி உருகி இன்பத் தமிழைப் பருகிப் பருகிப் பாடினார்.

தமிழ் வராதா? இல்லை முருகன்தான் அருள் வழங்காமல் போவானா?

திருப்புகழ் பிறந்தது!

பல தலங்களிலும் ஆங்காங்கே உள்ள முருகப் பெருமானைப் பற்றிய மெருகுடன் திருப்புகழ் பிறந்து தமிழுக்கும், பக்தி உலகிற்கும் பெரும் நிதியை அருளிற்று.

''அருணகிரி! வயலூருக்கு வா!'' என்று முருகன் கனவில் அருளினார்.

அருணகிரியார் திருவண்ணாமலையில் இருந்து வயலூருக்குச் சென்றார்.

வயலூர் திருச்சிக்கு அருகே உள்ளது.

அங்கு பொள்ளாப் பிள்ளையாரைப் பாடினார்.

பொள்ளாப்பிள்ளையார் என்றால் உளியால் செதுக்கப் படாமல் இயற்கையாகவே வந்த சுயம்பு ஆகும்.

அதுதான் கைத்தல நிறைகனி என்ற பாடலாகும்.

திருப்புகழ்

விநாயகர் துதி

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகள்
மற்பொரு திரள்புய மதயானை
மந்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே

முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

2

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுகத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

பிறகு அங்கே உள்ள வள்ளியம்மை தெய்வானை சமேதராகிய முருகப் பெருமானையும் பாடினார்.

அருணகிரிநாதருக்கு வயலூர் முருகன் மேல் தணியாத பக்தியும் ஈடுபாடும் இருந்தது.

அதனால் பல தலத் திருப்புகழிலும் வயலூர் முருகனைக் குறிப்பிட்டுப் பாடுவார்.

வயலூர் சிவன் கோவில்தான். திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலமும் கூட.

''விராலிமலைக்கு வா!'' என்று முருகன் அருணகிரிநாதரைப் பணித்தான்.

அங்கிருந்து புறப்பட்டு கானகம் வழியாக விராலிமலை சென்றார் அருணகிரிநாதர்.

விரலிச் செடிகள் நிறைந்த ஊர். ஆகையால் விராலிமலை என்று பெயர் பெற்றது என்பர்.

விரலி மாதர்கள்- அதாவது முருகன் சந்நிதியில் ஆடிப் பாடிப் பணி செய்யும் பெண்கள் நிறைந்த ஊர் என்பதாலும் விராலிமலை என்று பெயர் வந்தது என்றும் கூறுவர்.

அருணகிரிநாதருக்குக் கானகத்தில் விராலிமலை செல்ல வழி தெரியவில்லை.

திகைத்து நின்றார்.

ஒரு வேடன் வந்து அவரைக் கைப்பிடித்து அழைத்துச் சென்று விராலிமலையில் விட்டான்.

கணப்பொழுதில் அந்த வேடனைக் காணவில்லை.

மலை தெரிந்தது!

இதுவும் முருகனின் திருவிளையாடல் என்று உணர்ந்த அருணகிரியார் மலையில் ஏறிச் சென்றார்.

அங்கு மலையின் முன் முகப்பிலேயே ஒரு சிவலிங்கச் சந்நிதி இருந்தது- இருக்கிறது.

அதில் அருணகிரிநாதருக்கு முருகன் அஷ்டமா சித்திகளையும் அருளினான்.

அஷ்டமா சித்திகளாவன:

1. மிக நுண்ணிய உயிர்கள் தோறும் தான் மிக்க சிறுமையாகிய பரமாணுவாய்ச் சென்று தங்கும் நுண்மையான சக்தி என்னும் அனிமா.

2. மண் தத்துவம் முதல் சிவ தத்துவம் ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களின் உள்ளும் புறமும் நீங்காது நிறைந்திருக்கும் பெருமை மிக்க மகிமா.

3. மேரு மலையின் பாரம் போலக் கனத்திருக்கும் யோகியை எடுத்தால் இலேசான பரமாணுவைப் போலக் கனமற்று இருப்பதுவே இலகிமாவாம்.

4. இலேசான பரமாணுவைப் போல் மெலிந்திருக்கும் யோகியை எடுத்தால் மேரு மலையின் பாரம்போலக் கனமாக இருப்பதுவே கறிமாவாம்.

5. பாதாளத்திலுள்ள ஒருவன் பிரமலோகத்தில் புகுதலும் மீண்டும் பாதாளத்தை அடைதலும் பிராத்தியாம்.

6. வேறு உடலிற் புகுதலும், விண்ணில் சஞ்சரித்தலும், தான் விரும்பிய இன்பங்கள் அனைத்தையும் தானிருக்கும் இடத்தில் நினைத்த வண்ணமே வரச் செய்தலும் பிரகாமியமாம்.

சூரியன் தனது உடலின் ஒளியால் எல்லாவற்றையும் விளங்கச் செய்தல் போல, நில உலகில் உள்ள பொருள்கள் அனைத்தையும், மூன்று காலங்களையும், விண்ணுலகத்துப் பொருள்களையும், தன் உடம்பின் ஒளியினால் விளங்கச் செய்து தான் இருந்த இடத்திலேயே இருந்து அறிதலும் பிரகாமியம் ஆகும் என்பர்.

7. சிவபெருமானைப் போல ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் தன் இச்சையின்படியே இயற்றிச் சூரியன் முதல் ஒன்பது கோள்களும் ஏவல் கேட்க வீற்றிருப்பதுவே ஈசத்துவமாம்.

8. அவுணர், பறவை, விலங்கு, பூதம், மனிதர் முதலிய பல்வகை உயிர்களையும் இந்திரன் முதலிய திக்குப் பாலர்

எண்மரையும் தன் வசமாகச் செய்து கொள்வதுவே வசித்துவமாம்.

விராலிமலை

சீரான கோல கால நவமணி
மாலாபி ஷேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவை செயுமுக மலராறும்
சீராடு வீர மாது மருவிய
ஈராறு தோளு நீளும் வரியளி
சீராக மோது நீப பரிமள இருதாளும்

ஆராத காதல் வேடர் மடமகள்
ஜீமுத மூர்வ லாரி மடமகள்
ஆதார பூத மாக வலமிட முறைவாழ்வும்
ஆராயு நீதி வேலு மயிலுமெய்ஞ்
ஞானாபி ராம தாப வடிவமும்
ஆபாத னேனு நாளு நினைவது பெறவேணும்

ஏராரு மாட கூட மதுரையில்
மீதேறி மாறி யாடு மிறையவர்
ஏழேழு பேர்கள் கூற வருபொரு ளதிகாரம்
ஈடாய வூமர் போல வணிகரி
லூடாடி யால வாயில் விதிசெய்த
லீலாவி சார தீர வரதர குருநாதா

கூராழி யால்முன் வீய நினைபவ
னீடேறு மாறு பானு மறைவுசெய்
கோபால ராய னேய முளதிரு மருகோனே
கோடாம லார வார அலையெறி
காவேரி யாறு பாயும் வயலியில்
கோனாடு சூழ்வி ராலி மலையுறை பெருமாளே.

விராலிமலையில் பல அற்புதமான திருப்புகழ் பாக்களைப் பாடியவர் அருணகிரியார்.

ஆறுமுகங்களுடனும் வள்ளி தேவயானையுடனும் முருகப் பெருமான் விராலிமலையில் அற்புத அழகுடன் காட்சி தருகிறார்.

வீரவாகு தேவர் என்ற முருகனின் முக்கியத் தளபதி இத்தலத்தில் பேருருவத்துடன் காட்சி அளிக்கிறார்.

விராலிமலையில் இருந்து அருணகிரிநாதர் பல தலங்களுக்கும் சென்று முருகப் பெருமானைத் திருப்புகழால் பாடிப் பரவிப் பெரும் புகழ் பெற்றார்.

பழநிக்குச் சென்றார் அருணகிரியார். அங்கு ஜெபம் செய்து கொண்டிருந்தார். வெறுங் கையால் ஜெபம் செய்வதைக் கண்ட பழநி ஆண்டவன் அவருக்குச் ஜெபமாலை கொடுத்து அருளினான்.

''ஜெபமாலை தந்த சற்குருநாதா!'' என்று பழநி முருகனைப் போற்றிப் பாடினார்.

''அபகா நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனை நானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே''

பல தலங்களுக்கும் அருணகிரிநாதர் சென்றார்.

அனைத்து முருகப் பெருமான்களையும் அருமைத் தமிழால் அற்புதத் தமிழால், சந்தத் தமிழால் சொந்தம் கொண்டாடிப் பாடினார்.

எல்லாம் தமிழ் மக்களுக்காக- எல்லாம் தமிழ் நாட்டிற்காக- பக்திக்காகப் பக்தியைப் பரப்பி மக்களை நல்வழிப் படுத்துவதற்காக!

அருணகிரிநாதரின் சேவை நாட்டுக்குப் பெரும் பெருமையையும் அருமையையும் அன்பையும் ஆன்மீகத்தையும் வளர்த்தது.

சிந்தனைக்கு உரிய செந்தமிழ் சந்தத் தமிழாக- நமது சொந்தத் தமிழாக மலர்ந்து மணம் வீசுகிறது.

குன்றக்குடி முருகப் பெருமானை சில திருப்புகழ் பாடல்களால் அருணகிரிநாதர் போற்றிப் புகழ்ந்திருக்கின்றார்.

குன்றக்குடி

பிறர்புக ழின்சொற் பயிலுமி ளந்தைப்
பருவம தன்கைச் சிலையாலே
பிறவித ருஞ்சிக் கதுபெரு கும்பொய்ப்
பெருவழி சென்றக் குணமேவிச்

சிறுமைபொ ருந்திப் பெருமைமு டங்கிச்
செயலும ழிந்தற் பமதான
தெரிவையர் தங்கட் கயலைவி ரும்பிச்
சிலசில பங்கப் படலாமோ

கெறுவித வஞ்சக் கபடமொ டெண்டிக்
கிலுமெதிர் சண்டைக் கெழுசூரன்

கிளையுடன் மங்கத் தலைமுடி சிந்தக்
கிழிபட துன்றிப் பொருதோனே

குறுமுநி யின்பப் பொருள்பெற அன்றுற்
பனமநு வுஞ்சொற் குருநாதா
குலகிரி துங்கக் கிரியுயர் குன்றக்
குடிவளர் கந்தப் பெருமாளே.

அருணகிரிநாதர் ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு வந்தார். அங்கே வில்லிப்புத்தூர் ஆழ்வார் என்ற மகா வித்வான் ஒருவர் இருந்தார்.

அவர் போலிப் புலவர்களையெல்லாம் காதை அறுத்து அவமானம் செய்து கொண்டிருந்தார்.

புலவர்களை அவ்வாறு செய்யக்கூடாது என்ற கருணை உள்ளம் கொண்ட அருணகிரிநாதர் அவரைச் சந்தித்தார்.

வில்லிப்புத்தூர் ஆழ்வார் ஒரு போட்டி வைப்பார்.

அவர் பாடும் பாட்டுக்குப் பொருள் சொல்லிவிட்டால் விட்டு விடுவார்.

இல்லையென்றால் கொறடைக் கொண்டு புலவரின் காதை அறுத்துவிடுவார்.

அருணகிரிநாதரும் அப்போட்டிக்கு ஒப்புக் கொண்டார்.

போட்டியைப் பற்றித் தெரியுமா என்றார் ஆழ்வார்.

''சொன்னால் தெரியும்!'' என்றார் அருணகிரியார்.

நீங்களும் உங்கள் காதில் மற்றொரு கொறடை மாட்டிக் கொள்ளுங்கள் என்றார் அருணகிரியார்.

அவ்வாறே அவரும் ஒரு கொறடைத் தன் காதில் மாட்டிக் கொண்டார்.

ஆழ்வார் ஒரு பாடல் பாடினார். அருணகிரியார் அதற்குப் பொருள் சொன்னார்.

பின்னர் அருணகிரியார் ஒரு பாடல் பாடினார்.

தத்தாகாரத்தில் அமைந்தது அந்தப் பாடல்.

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்து தித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்தே.

பொருள் புரியவில்லையே என்று திகைத்தார் வில்லிபுத்தூர் ஆழ்வார்.

அருணகிரியார் அதற்குப் பொருள் சொன்னார்.

திதத்தத்தத்தித்-திதத்தத் தத்தித்த என்னும் தாளப் பிரமாணங்களை, திதி-திருநடனத்தினால் காப்பாற்றி வருகின்ற. தாதை-சிவபிரானும், தாத-நான்முகனும், துத்தி-படப்பொறியினையுடைய தத்தி-பாம்பின், தா-இடத்தையும், தித-நிலைபெற்றுக்கொண்டு, தத்து-ததும்புகின்ற, அத்தி-சமுத்திரத்தைப் பாலாகக் கொண்டு, ததி-தயிரானது, தித்தித்ததே-தித்திக்கின்றதென்று, து-உண்ட கண்ண பிரானும், துதித்து-துதிசெய்து வணங்குகின்ற, இதத்து-பேரின்ப சொரூபியான ஆதி-மூலப்பொருளே! தத்தத்து-தந்தத்தையுடைய, அத்தி-அயிராவதத்தால் வளர்க்கப்பெற்ற, தத்தை-கிளியைப் போலுள்ள தெய்வானைக்கு தாத-தொண்டனே! திதே-தீமையை, துதை-நெருங்கிய-தாது-சப்த தாதுக்களால் நிறைந்ததும், அதத்து-மரணத்தோடும், உதி-ஜனனத்தோடு, தந்து-பல தத்துவங்களோடும், அத்து-இசைவுற்றதுமான, அத்தி-எலும்புகளை மூடிய, தத்தி-பையாகிய இந்த உடல், தீ-நெருப்பினால்,

தீ-தகிக்கப்படுகின்ற, திதி-அந்தநாளில், துதி-உன்னைத்துதிக்கும், தீ-புத்தியானது, தொத்தது-உனக்கே எந்நாளும் அடிமையாக இருக்க வேண்டும்.

இவ்விதம் தகர இன எழுத்து மட்டும் வரும்படி மேற்கூறிய பாடலுக்கு, அருணகிரிநாதரே பொருள் கூறினார். இங்ஙனம் இவர் பாடல்கள் முழுமையும் திறம் விளங்கும்.

மிகவும் உயர்ந்த கருத்தினைக் கொண்ட அந்தாதியின் தத்துவத்தைக் கேட்ட வில்லிப்புத்தூரார் அருணகிரிநாதரைப் போற்றிப் பணிந்து மதித்துத் துதித்துப் பாராட்டினார்.

''சரி! நான் தோற்றுவிட்டேன்! என் காதை அறுத்துவிடும்!'' என்றார் ஆழ்வார்.

''உன் காது எம் காதாக இருக்கட்டும்! புலவர்களை அவமானப்படுத்துவதை விட்டுவிடும். மகாபாரத்தைத் தமிழில் பாடும்!'' என்று பணித்துவிட்டு அங்கிருந்து விடைபெற்றார். அருணகிரிநாதர்.

அருணகிரிநாதர் திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்தார்.

சம்பந்தாண்டான் என்ற ஒரு சமண மதத் துறவி-அருணகிரிநாதரின் மேல் பொறாமை கொண்டு பல சூழ்ச்சிகள் செய்தான்.

''இந்த அருணகிரி என்பவன் சிற்றின்பத்தில் உழன்றவன். இப்பொழுது ஏதோ முருகன் அருள் வந்துவிட்டது என்று கூறி ஊரை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றான்!'' என்று அப்போது அரசாண்ட பிரபுடதேவ மகாராஜாவிடம் சொல்லி அருணகிரியைத் தண்டிக்க வேண்டும் என்று சொன்னான்.

''இவன் உண்மையில் முருக பக்தன் என்றால் சபையில் முருகனை வரவழைக்க முடியுமா?'' என்று சவால் விட்டான்.

அரசனும் அவன் பேச்சைக் கேட்டு அருணகிரிநாதரை முருகனை வரவழைக்கும்படிப் பணித்தார்.

அருணகிரிநாதரும் உருக்கமாகத் திருப்புகழ் பாடி முருகப் பெருமானை வரவழைத்தார்.

பொது

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள மவையாட

மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்

கதைவி டாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய்மீள விஜய னேறு தேர்மீது
கனக வேத கொடுதி அலைமோதும்

உததி மீது லேசாயு முலக மூடு சீர்பாத
உவண மூர்தி மாமாயன் மருகோனே
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே.

அனைவரும் முருக தரிசனம் கண்டு மகிழ்ந்தனர்.

பக்குவம் இல்லாத பக்தியால் சமணத் துறவியின் பேச்சைக் கேட்ட பிரபுடதேவ மகாராஜனுக்குக் கண் பார்வை இல்லாமல் போயிற்று.

தேவலோகத்துப் பாரிஜாத மலரைக் கொண்டு வந்தால்தான் அரசருக்குக் கண் பார்வை வரும். அக்காரியத்தை அருணகிரிதான் செய்ய வேண்டும் என்று அரசனிடம் சம்பந்தாண்டான் சொன்னான்.

அரசனும் அவ்வாறே கட்டளை இட அருணகிரிநாதரும் தன் பூத உடலை திருவண்ணாமலை ராஜ கோபுரத்தில் கிடத்திவிட்டு, அங்குக் கிடந்த ஒரு கிளியின் உடலில் கூடு விட்டுக் கூடு பாய்ந்து தேவலோகம் சென்றார்.

பாரிஜாத மலரைக் கொண்டு வந்து அந்தக் கோபுரத்தில் கிளியாக நின்றார்.

பிரபுட தேவ மகாராஜனுக்கு மட்டுமல்ல- கண்பார்வையற்ற பலரும் உடனே கண் பார்வை பெற்றுக் களித்தனர்.

அருணகிரிநாதர் தன் பூத உடலைச் சம்பந்தாண்டான் எரித்துவிட்டான் என்பதை உணர்ந்து கிளியாகவே நின்று கந்தர் அநுபூதிப் பாடல்களைப் பாடினார்.

இன்றும் அந்தக் கோபுரத்திற்குக் கிளிக் கோபுரம் என்ற பெயரே வழங்கி வருகிறது.

பின்னர் அருணகிரிநாதர் முருகப்பெருமானின் கரத்தில் கிளியாக அமர்ந்து முக்திப் பேற்றை அடைந்தார்.

ஆயிரக் கணக்கான திருப்புகழைப் பாடியதோடு அல்லாமல் அருணகிரிநாதர் கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் முதலிய அற்புதமான சந்தப் பாடல்களையும் பாடினார்.

வேல் விருத்தத்தில் வேல்- என்று துவங்கி- வேலே- என்று முடித்தார்.

அது கேட்டு மகிழ்ந்த முருகப் பெருமான் ''பலே'' என்றாராம்.

வாக்கிற்கு அருணகிரி என்று பலராலும் புகழப்பெற்றவர் அருணகிரிநாதர் ஆவார்.

திருப்புகழில் இராமாயணக் கதை உண்டு. பாரதக் கதையும் உண்டு.

திருப்புகழுக்கு நிகர் திருப்புகழே! சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்பது பழமொழியாகும். முருகனை நினைத்து கந்தசஷ்டியில் விரதம் இருந்தால் குழந்தைப் பேறு உண்டாகும் என்பது பொருளாகும். திருப்புகழைப் பாடிப் பரவி- தமிழையும் வளர்ப்போம்- பக்தியின் சக்தியையும் பெறுவோம்.

முருகனை வணங்கி பேரின்பப் பெருவாழ்வு பெறுவோமாக!

சுக்குக்கு மேல் மருந்தும் இல்லை;
சுப்பிரமணியனுக்கு மேல் தெய்வம் இல்லை!

திருப்புகழைப் படித்தால் என்ன பெறலாம்?

''ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள வரம்பெறலாம்-மோனவீடு
ஏறலாம் யானைக்கிளையான் திருப்புகழைக்
கூறினோர்க் காமேயிக் கூறு.''

''திருப்புகழ் படிக்குமவர் சிந்தை வலுவாலே
ஒருத்தரை மதிப்பதில்லை உன்றன் அருளாலே
பொறுப்பரை மிகப் பெரிதும் வென்றும் மயில்மீதே
தரித்தொரு திருத்தணிகை நின்ற பெருமாளே!''

ஒருத்தரை மதிப்பதில்லை என்றால் எல்லோரையும் முருக பக்தர்களாகவே கருதி ஜீவன்கள் அனைவரையும் மதிப்பார்கள் என்பது பொருளாகும்.

எல்லோர் உடம்பிலும் ஒரே ஜீவன் ஊடுருவிப் பாய்கிறது என்ற தத்துவமே ஆகும்.

எல்லா உயிர்களும் ஒன்றே
ஆண்டவன் படைப்பில் அனைத்து
உயிர்களும் சமமானவை ஆகும்
என்ற தத்துவமே இங்கு
நிலைநாட்டப் பெறுகிறது.

இது திருப்புகழ் தித்திக்கும் தத்துவம் மட்டுமல்ல. சைவ சித்தாந்தக் கோட்பாடும் இதுவே ஆகும்.

க்ஷேத்திரக் கோவை

கும்ப கோணமொ டாரூர் சிதம்பரம்
உம்பர் வாழ்வுறு சீகாழி நின்றிடு
கொன்றை வேணியர் மாயூர மம்பெறு சிவகாசி

கொந்து லாவிய ராமேசு ரந்தனி
வந்து பூஜைசெய் நால்வேத தந்திரர்
கும்பு கூடிய வேளூர் பரங்கிரி தனில்வாழ்வே

செம்பு கேசுர மாடானை யின்புறு
செந்தி லேடகம் வாழ்சோலை யங்கிரி
தென்றன் மாகிரி நாடாள வந்தவ செகநாதஞ்

செஞ்சொ லேரக மாவா வினன்குடி
குன்று தோறுடன் மூதூர் விரிஞ்சைநல்
செம்பொன் மேனிய சோணாடு வஞ்சியில் வருதேவே

கம்பை மாவடி மீதேய சுந்தர
கம்பு லாவிய காவேரி சங்கமு
கஞ்சி ராமலை வாழ்தேவ தந்திர வயலூரா

கந்த மேவிய போரூர் நடம்புரி
தென்சி வாயமு மேயா யகம்படு
கண்டி யூர்வரு சாமீக டம்பணி மணிமார்பா

எம்பி ரானோடு வாதாடு மங்கைய
ரும்பர் வாணிபொ னீள்மால் சவுந்தரி
எந்த நாள்தொறு மேர்பாக நின்றுறு துதியோதும்

இந்தி ராணிதன் மாதோடும் நன்குற
மங்கை மானையு மாலாய் மணந்துவ
கெங்கு மேவிய தேவால யந்தொறு பெருமாளே.

அருணகிரிநாதர் அருளிய அறுபடை வீட்டுத் திருப்புகழ்

திருப்பரங்குன்றம்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண்டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமானே.

திருச்செந்தூர்

இயலிசையி லுசித வஞ்சிக் கயர்வாகி
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே
உயர்கருணை புரியுமின்பக் கடல்மூழ்கி
உனையெனது ளறியுமன்பைத் தருவாயே
மயில் தகர்க லிடையரந்தத் தினைகாவல்
வனசகுற மகளை வந்தித் தனைவோனே
கயிலைமலை யனைய செந்திற் பதிவாழ்வே
கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே.

திருவாவினன்குடி

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்றனக் கிளையானே
இமவான் மடத்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

சுவாமிமலை

நிறைமதி முகமெனு மொளியாலே
நெறிவிழி கணையெனு நிகராலே
உறவுகொள் மடவர் லுறவாமோ
உனதிரு வடியினி யருள்வாயே
மறைபயி லரிதிரு மருகோனே
மருவல ரசுரர்கள் குலகாலா

குறமகள் தனைமண மருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே.

குன்றுதோறாடல்

அதிருங் கழல் பணிந்துன் அடியேனுன்
அபயம் புகுவதென்று நிலைகாண
இதயந் தனில் இருந்து க்ருபையாகி
இடர்சங் கைகள் கலங்க அருள்வாயே
எதிரங் கொருவரின்றி நடமாடும்
இறைவன் தனதுபங்கில் உமைபாலா
பதியெங் கிலுமிருந்து விளையாடிப்
பலகுன் றிலும்அமர்ந்த பெருமாளே.

பழமுதிர்சோலை

காரணம தாக வந்து புவிமீதே
காலனணு காதிசைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞான நடமேபுரிந்து வருவாயே
ஆரமுத மானதந்தி மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூரர்கிளை மாளவென்ற கதிர்வேலா
சோலைமலை மேவிநின்ற பெருமாளே

எழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி அவதாரம்
இனியுள தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக முடியாது

கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவு மயர்வானார்
கடனுன தபய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் தருவாயே

விழுதிக ழழகி மரகத வடிவி
விமலிமு னருளு முருகோனே
விரிதல மெரிய குலகிரி நெரிய
விசைபெறு மயிலில் வருவோனே

எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை யுடையோனே
இமையவர் முநிவர் பரவிய புலியு
ரினில்நட மருவு பெருமாளே.

வள்ளிமலை

குடிவாழ்க்கை யன்னை மனையாட்டி பிள்ளை
குயில்போற்ப்ர சன்ன மொழியார்கள்
குலம்வாய்த்த நல்ல தனம்வாய்த்த தென்ன
குருவார்த்தை தன்னை யுணராதே

இடநாட்கள் வெய்ய நமனீட்டி தொய்ய
இடர்கூட்ட இன்னல் கொடுபோகி
இடுகாட்டி லென்னை எரியூட்டு முன்னு
னிருதாட்கள் தம்மை யுணர்வோனோ

வடநாட்டில் வெள்ளி மலைகாத்து புள்ளி
மயில்மேற்றி கழ்ந்த குமரேசா
வடிவாட்டி வள்ளி அடிபோற்றி வள்ளி
மலைகாத்த நல்ல மணவாளா

அடிநாட்கள் செய்த பிழைநீக்கி யென்னை
யருள்போற்றும் வண்மை தரும்வாழ்வே
அடிபோற்றி யல்லி முடிசூட்ட வல்ல
அடியார்க்கு நல்ல பெருமாளே.

ரத்நகிரி (வாட்போக்கி)

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

கந்தர் அலங்காரம்

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையுமென் றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவ னேமயி லேறிய மாணிக்கமே.

கந்தரநுபூதி

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே.

உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனு நீ யலையோ
எல்லாமற என்னை யிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே.

வளைபட்ட கைம் மாதொடு மக்க ளெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே.

மகாமாயை களைந்திட்ட வல்ல பிரான்
முகமாறு மொழிந்து மொழிந் திலனே
அகமாடை மடந்தைய ரென் றயருஞ்
சகமாயையுள் நின்று தயங்குவதே.

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந்த மரும்புமதோ
பணியா வென வள்ளி பதம் பணியுந்
தணியா வதிமோக தயாபரனே.

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம்பொரு தானவ நாசகனே.

மட்டூர்குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டூசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டூ டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூர நிராகுல நிர்ப் பயனே.

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

கூகா வெனவென் கிளைகூடி யழப்
போகா வகை மெய்ப் பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலுகவித்
தியாகா சுரலோக சிகாமணியே.

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இரு சொல் லறவென் றலுமே
அம்மா பொரு ளொன்று மறிந்திலனே.

முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே.

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழி நாசியொடுஞ் செவியாம்
ஐவாய் வழி செல்லும வாவினையே.

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே.

பேராசை யெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோக துரந்தரனே.

எந்தாயும் மெனக் கருள்தந் தையும்நீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே எனையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

புதிய பக்திப் புத்தகங்கள்

1) கவசக்கொத்து ரூ. 100.00

(36 தெய்வங்களுக்கு 38 கவசங்கள் விநாயகர் முதல் ஆஞ்சநேயர் வரை உள்ள சிறப்புத் தோத்திரங்கள், சக்தித் தலங்கள் 51 பற்றிய விளக்கம், அறுபடை வீடு திருப்புகழ் 108 வைணவத் தலங்கள், நவதிருப்பதி விளக்கம், மகாலெஷ்மி சரஸ்வதி கவசங்கள், இன்னும் பல சிறப்பு அம்சங்கள் உலகத்திலேயே உயர்ந்த மனிதர் யார்? உலகத்திலேயே உயர்ந்த நூல் எது? உலகத்திலேயே உயர்ந்த கொள்கை எது? உலகத்திலேயே உயர்ந்த கொடி எது? இந்த நான்கு கேள்விகளுக்கும் சிறப்பான பதிலைச் செப்பும் கவசக்கொத்து, சிறந்த நூல்-உயர்ந்த நூல் டெம்மி சைஸில் 339 பக்கங்கள்)

2) ஆஞ்சநேயர் கவசம் 70.00

தோத்திரப் பாடல்கள், ஆஞ்சநேயர் பற்றிய சிறப்புக் கட்டுரைகள், பலவிதமான தோத்திரங்கள், பல ஆஞ்சயநேயரின் தலப் படங்கள், இராமாயணம் பற்றிய கட்டுரைகள், மதுரா அஷ்டகம், திவ்வியப் பிரபந்தப் பாசுரப்படி இராமாயணம், கம்பன் பாடல்கள் ஆழ்வார்களின் இராமாயணப் பாடல்கள்

இன்னும் பல சிறப்பு அம்சங்கள் அடங்கியது.
228 பக்கங்களைக் கொண்டது.

3) நவக்கிரக் கவசம் 50.00

தோத்திரப் பாடல்கள் (ஒன்பது கிரகங்களின் படங்கள்- கவசங்கள்- ஆதித்திய ஹிருதயம் பொருளுரையுடன், ஒன்பது கிரகங்களுக்கும் முழு விபரங்கள் கொண்ட பெரிய அட்டவணை இன்னும் பலசிறப்பு அம்சங்களைக் கொண்டது. பக்கங்கள் - 144)

4) திருவிளக்கு பூஜை 40.00

கன்னிப் பெண்களுக்கு ஒரு திருமணஞ்சேரி (அஷ்டலெட்சுமி படங்களுடன் கூடியது. இல்லங்களிலும், கோவில்களிலும், விளக்கு பூஜை செய்வற்கு ஏற்ற நூல், திருமணம், சுணக்கமாக உள்ள ஆண்கள்- பெண்கள் திருமணஞ்சேரி என்ற தலம் சென்று எப்படிப் பிரார்த்தனை செய்வது என்பது பற்றிய விளக்கத்துடன் தோத்திரங்களும் அடங்கியது. பக்கங்கள் 128).

5) நவக்கிரகக் கோலம் 6.00

(ஒன்பது கிரகங்களின் படங்களுடன் கோவில்களின் படங்களும் அடங்கியது. பக்கங்கள் 48)

6) ராகுகாலதுர்க்கை ஸ்தோத்திரம் 6.00
(பூஜைமுறைகள் - துர்க்கா கவசம், அஷ்டோத்திரம் - நாமாவளி - பல தமிழ் பாடல்களும் அடங்கியது. பக்கங்கள் - 48)

7) ஆஞ்சநேயர் கவசம் 6.00
(சாலிஸா, தண்டகம், இராமாயணம், அநுபூதி முதலியவை அடங்கியது. பக்கங்கள் - 48)

8) சக்தி நித்திய பாராயணம் 6.00
(லலிதா நவரத்தின மாலை - துக்க நிவாரண அஷ்டகம், அஷ்ட லெட்சுமி தோத்திரம், திருவிளக்கு பூஜை - கனக துர்க்கா ஸ்தோத்திரம், மதுராபுரி அம்பிகை மாலை - கச்சி உமாதேவி - திருக்கடவூர் அபிராமி - அக்கினியில் தவம் செய்யும் மாங்காட்டுக் காமாட்சி - தாலிப் பாக்கியம் காக்கும் தையல்நாயகி தோத்திரம் - இன்னும் பல சிறப்பு அம்சங்கள் கொண்டது. பக்கங்கள் - 48)

9) விநாயகர் அகவல் 6.00
கந்தர் சஷ்டிக் கவசம், பாம்பன் சுவாமிகளின் சண்முகக் கவசம்

10) நோபல் பரிசு பெற்ற பெருமக்கள் 70.00

11) கல்விக் கண் திறந்த கதைகள் 35.00

12) டாக்டர் இராதாகிருஷ்ணன் வாழ்வும்-வாக்கும் 20.00

13) செட்டிநாட்டுத் தாலாட்டு 50.00

14) ஐ.நா. சபையின் வரலாறும் பணியும் 35.00

15) உலக நாடுகள் 60.00

16) சாணக்கியனை வென்றவள் 60.00
(சரித்திர நவீனம், 1923-ம் ஆண்டு சிவகங்கை மாவட்ட எழுத்தாளர் சங்கத்தின் முதன்மைப் பரிசு பெற்றது)


17) நாட்டியாஞ்சலி (இசை நூல்) 60.00

நூல்கள் வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு புத்தக விலையுடன் கூரியர் செலவு ரூ. 30 சேர்த்து M.O. செய்யவும்.

ஆசிரியர்: **CN. நாச்சியப்பன்**
பொதிகை இல்லம்
2/3281, இரண்டாவது வீதி, கற்பக விநாயகர் நகர்,
செக்காலைக்கோட்டை அஞ்சல்,
காரைக்குடி-630 002. சிவகங்கை மாவட்டம்.
தொலைபேசி: 04565-226233
செல்: 8015380187

அருணகிரிநாதர் புத்தகத்தின் விலை ரூ. 15.00 மட்டும்

வெளியீடு: 2016


நிருதிலிங்கம்
வருணலிங்கம்
எமலிங்கம்
வாயுலிங்கம்
அக்னிலிங்கம்
குபேரலிங்கம்
இந்திரலிங்கம்
ஈசான்யலிங்கம்



பூச்சரம், காரைக்குடி செல் : 98847